FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364118

1. District : Tiruvallur PS: Vigilance and Anti-corruption Year: FIR No.: 7/BC/2026/DVL Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள் 11-06-2026 at about 09.30hrs.

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்: U/s. 7
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 10/6/2026 at about Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 1830 hrs. & 19.30 hrs Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time : at about 08.30 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11/6/2026 நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 11/6/2026 Time : at 08.30 hrs & 09.30 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: West circle, about 65 kms.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : — (b) Address : Thamaneri Village DPC, R.K.pet Taluk, Tiruvallur District.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

Seen
J.Selvam
11/6/26

6. Complainant /Informant (a) Name : Tr. J. Selvam (b) Father's/ Husband's Name : Shanmugam
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 49 years (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Seen
Complt.
11/6/26
Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Ex-Army and Dy. Manager in TVS Ashok Leyland Company, Vellore (g) Address : No. 3/40, Rangapuram Village & Post, R.K.pet Tk, Tiruvallur Dt.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Sounder, Bill Collector, Thamanery DPC, R.K.pet Taluk, Tiruvallur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—Nil—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demanded Rs. 10,750/- as bribe from the Complainant to prepare bill and to forward it to his officer for Sanctioning the Complainant's Bill amount.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Submitted:- When I present at Thiruvallur VVAC office on today 11/6/2026 at about 08.30 hrs. One Tr. S. Selvam, age-49, S/o. Shanmugam, Rangapuram Village and post, R.K. pet Taluk, Thiruvallur District appeared before me and lodged a Complaint against the Thamaneri Village DPC Bill Collector Tr. Sounder. The Content of the Complaint as follows:- மனுதாரர், S. செல்வம், வயது-49, த/ஏ. சண்முகம், எண். 3/40, ராகவாபுரம் கிராமம் மற்றும் தபால், ஆர். கே. பேட்டை தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். மனுதாரர், காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, திருவள்ளூர்.

[FIR Contents Continue to the Separate sheet...]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. S. Ramesh Babu, Insp. of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS. VVAC, Thiruvallur ....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

11/6/2026

[Tr. S. Ramesh Babu]

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் On 11/6/2026 at about- 12.30 hrs.

Name: பெயர் .....
Rank: நிலை Inspector, VVAC, Thiruvallur No. எண் .....

INSPECTOR OF POLICE
VIGILANCE & ANTI CORRUPTION
Thiruvallur - 602 001.

(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.07/AC/2026/TVL, U/s. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 continues . . .)

ஐயா, நான், மேற்குறிப்பிட்ட முகவரியில் என் மனைவி கோகிலா மற்றும் அம்மா சந்திரா ஆகியோர்களுடன் வசித்து வருகிறேன். எனது மூத்த மகன் கார்த்திக் குமார், அயல்நாட்டில் (கஜகிஸ்தான்) 4-ம் ஆண்டு மருத்துவப்படிப்பும், எனது இளைய மகன் சுரேஷ் குமார், முதலாமாண்டும் படித்து வருகிறார்கள். நான் இராணுவத்தில் சுபேதாரராக -ஆக பணிபுரிந்து கடந்த 31.08.2020-ம்தேதி ஓய்வு பெற்றுவந்தேன். அதன்பின் கடந்த ஜூன்/2023-லிருந்து வேலூரிலுள்ள TVS Ashok Leyland Company-யில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். மேலும், என் அம்மா பெயரிலுள்ள சுமார் 4 ஏக்கர் விவசாய நிலத்தில் பயிர் செய்து வருகிறேன். வருடத்திற்கு 2 அல்லது 3 போகம் பயிர் செய்து வருகிறேன். மேற்படி பயிர் அறுவடை செய்ததும், அதனை விற்பனை செய்து விடுவேன். இந்த முறையும் நான் அறுவடை செய்த நெல்லை எடை போட்டு விற்பனை செய்வதற்காக எங்கள் ஊரை சுற்றியுள்ள சுமார் 10 கிராமங்களின் விவசாயிகளுக்காக அரசால் நடத்தப்படும் நேரடி நெல் கொள்முதல் விற்பனை நிலையம் (DPC) ஒன்றை தம்மனேரி கிராமத்தில் கடந்த சுமார் 3 மாதமாக நடைபெற்று வருகிறது, அதனை நாடியபோது, அங்கு பில் போடும் திரு.சௌந்தர் என்பவர் மறுநாள் நெல்லை எடுத்துவருமாறு கூறினார். நானும் 10.06.2026-ந்தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு இரு டிராக்டர்களில் எடுத்துச்சென்று, மேற்படி சௌந்தரிடம் கூறியபோது, அவரும் என் நெல்லை தூவி சுத்தம் செய்து பின் 41 கிலோ கோணிப்பையில் அளந்தார். அப்போது மொத்தம் 215 பைகளாக அளக்கப்பட்டது. அதனை அந்த களத்திலேயே போட்டுவிட்டு, என்னிடம் பணம் கேட்டார். நான் அவரிடம் மாலை சுமார் 06.30 மணியளவில் அவர் அளந்து போட்ட நெல் மூட்டைகளுக்கு பில் கேட்டேன். அதற்கு திரு.சௌந்தர் அவர்கள், ஒரு பைக்கு ரூ.50/- வீதம் 215 பைக்கு ரூ.10,750/- பணம் கொடுத்தால்தான் நெல் மூட்டைகளுக்கு பில் கொடுத்து, அவர்களது தலைமை அலுவலகத்திற்கு பில்லை அனுப்புவேன். அப்படி அனுப்பினால்தான், வரிசைப்படி எனக்கு விற்கப்பட்ட நெல் மூட்டைகளுக்கு பணம் கிடைக்கும் என்று கூறினார். மேற்படி விவரத்தை என் அம்மாவின் பெயர், ஆதார் எண், அவருடைய செல்போன் எண், எத்தனை மூட்டைகள் என்ற விவரங்களை அங்கிருந்த சின்ன நோட்டு புத்தகத்தில் குறித்துக்கொண்டார். நானும் சிறிது நேரம் காத்திருந்தபோது மற்ற விவசாயிகளும் அப்படித்தான் அளந்தவுடன் பணத்தை கொடுத்து பில் வாங்கிக்கொண்டு புலம்பிக்கொண்டே போவது தெரிந்தது. ஆனால் அந்த பில்லில் அவர் வாங்கும் பணத்திற்கான எந்த பதிவும் இல்லை. அவர்கள் விற்கும் நெல்மூட்டைகள் மற்றும் அதன் மதிப்புகளை மட்டுமே அவர் எழுதி அனுப்புகிறார் என்பதை தெரிந்துக்கொண்டேன். அதனால் திரு.சௌந்தர் அவர்கள்

(FIR content continues to the next page.....)

(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.07/AC/2026/TVL, U/s. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 1988 continues . . .)

விவசாயிகளிடம் அவர்கள் பயிர் செய்த நெல்லை அரசின் மூலம் கொள்முதல் செய்துக்கொள்ள ஒரு 41 கிலோ பைக்கு ரூ.50/- பணம் லஞ்சமாக பெறுகிறார் என்று தெளிவாக தெரிந்தது. அரசிற்கு சேராமல் தனிப்பட்ட நபர் யாருடைய உத்திரவில் விவசாயிகளின் நன்மைக்காக உருவாக்கப்பட்ட இந்த நேரடி கொள்முதல் விற்பனை நிலையங்களை சட்டத்திற்கு புறம்பாக பயன்படுத்தி அதில் லாபம் காணும் நபர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்தேன். மேலும், கடந்த 10.06.2026-ந்தேதி இரவு சுமார் 07.30 மணியளவில் திரு.சௌந்தர் அவர்கள் அவருடைய செல்போன் எண்ணிலிருந்து, என் அம்மாவின் செல்போன் எண்ணிற்கு (7806970829) தொடர்பு கொண்டு ஓடிபி எண் வந்திருக்கும் அதனை தெரிவிக்குமாறு கேட்டதற்கு, என் அம்மா என்னிடம் போனை கொடுத்தார். அப்போதுதான் திரு.சௌந்தர் பேசி ஓடிபி எண்ணை பெற்றுக்கொண்டு, நாளை பணத்துடன் வந்துவிடுங்கள், இல்லாவிட்டால் பெயர் விட்டுபோய்விடும் என்று கூறிவிட்டு போனை வைத்தார். எனக்கு திரு.சௌந்தரிடம் லஞ்சமாக பணம் கொடுத்து, என் நெல் மூட்டைகளை அரசு கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்ய விரும்பம் இல்லாததால், மேற்படி பில் கலெக்டர் திரு.சௌந்தர் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள இந்த புகாரை தயார் செய்துக்கொண்டு, அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.10,750/-ம் எடுத்துக்கொண்டு இன்று 11.06.2026-ந்தேதி காலை சுமார் 8.30 மணியளவில் தங்கள் அலுவலகத்திற்கு வந்து தங்களிடம் இப்புகாரை அளிக்கிறேன். மேலும் தாங்கள் சட்டப்படி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நான் எனது முழு ஒத்துழைப்பையும் அளிப்பேன் என்று இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிக்கு, SdXXX (S.செல்வம்), 11.06.2026.

Honoured Madam,

The above Complaint was received by me on 11.06.2026 at about 08.30 hrs and after getting proper permission from DVAC, a discreet enquiry is conducted. Based on the outcome of the enquiry, there is prima-facie made out to register a FIR on said complaint. Hence, I registered a trap case in Thiruvallur V&AC, Cr.No.07/AC/2026/TVL u/s. 7 of The Prevention of Corruption (Amendment) Act-2018 on 11.06.2026 at about 09.30 hrs. and proceeded to trap. **SdXXX(G.S.TAMIZHARASI),** Inspector of Police, Vigilance and Anti-Corruption, Tiruvallur.

The original FIR along with the complaint are sent to the court of Hon'ble Principal District and Sessions Judge, Tiruvallur and the other copies to the concerned officers in DVAC on 11.06.2026 at about 12.30 hrs.

(G.S.TAMIZHARASI),
INSPECTOR OF POLICE
VIGILANCE & ANTI CORRUPTION
Thiruvallur - 602 001.